[1971 ஜூன் 22

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழுள்ள தனியார் மருந்தகங்கள்.

***19 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பயன் படுத்தப்படும் தனியார் மருந்தகங்கள் எவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தற்போது பயன்படுத்தப்படும் தனியார் மருந்தகங்கள் மூன்று. அவையாவன :—

வட ஆர்க்காடு மாவட்டம் :—

1. E.I.D. பாரி நிர்வாகத்தினரின் மருந்தகம், இராணிப் பேட்டை.

2. ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, இராணிப்பேட்டை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் :—

3. டால்மியா சிமெண்ட் கம்பெனி நிர்வாகத்தினரின் மருந்தகம், டால்மியாபுரம்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, இந்த மருந்தகங்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக ஏதாவது நிதி கொடுக்கப்படுகிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, புது டெல்லியிலுள்ள ஈ.எஸ்.ஐ. நிறுவனம் நிர்ணயித்துள்ள அடிப்படையில் தொழில் அதிபர்களுக்கு அரசு நிதி செலுத்தி வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ராணிப்பேட்டையில் தனியார் துறையிலும் ஒரு மருத்துவ மனை இருக்கிற காரணத்தால் அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. எனவே, அதைப் போக்கு கிற வகையில், நம்முடைய அரசாங்கம் தனியாக ஒரு மருத்துவ மனை அமைக்க முன் வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுவரையில் அப்படிப் பட்ட விவரம் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததன் அடிப்படையில் பரிசிலித்து அவசியமானால் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, தமிழகத்தில் எங்கெங்கே ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் இருக்கின்றன? அவை இல்லாத இடங்களில் அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

1971 ஜூன் 22]

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. விதிமுறைகளின் கீழ் வராத தொழிலாளர்கள் உள்ள பகுதிகளில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி விஸ்தரிக்கும் திட்டம் உண்டா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்து பரிசீலிக்கப்படும்.

திருப்பூர் கூட்டுறவு பண்டகசாலை

*23 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் கூட்டுறவு ஸ்டோருக்கு குடோன் Godown மற்றும் இதர காரியங்களுக்கு திருப்பூர் ஒ. காங்கயம் ரோட்டில் எவ்வளவு நிலம் என்ன விலைக்கு வாங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வாங்கிய நிலத்தின் நிலப்பரப்பு 1.90 ஏக்கர். வாங்கிய விலை 17,100 ரூபாய். ஏக்கர் ஒன்றுக்கு 9,000 ரூபாய். பின்னால் கூட்டுறவுத் துறையின் பதிவாளர் இதைப்பற்றி விசாரணை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கையையும் பெற்று, இந்த நிலம் ரூ. 9000-க்கு வாங்கிய போதிலும், அதனுடைய பெறுமதிப்பு ரூ. 1,000 என்று தெரிந்து விட்டது. தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதில் வீணாக விரயம் செய்யப்பட்ட தொகை ரூ. 16,729.50-ஐ அந்த இயக்குநர் அவநாசியப்ப கவுண்டர், ஏனையோர் ஈடுசெய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

திரு. சு. துரைசாமி : கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, பொதுமக்களின் பணத்தைக் கூட்டுறவுத் துறை இயக்குநரே அந்த நிலத்திற்கு அதிகமான விலை கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நிலம் வாங்கிய சம்பவம் நடைபெற்றது 1966-இல் நடவடிக்கை தொடங்கியது, எனக்கு முந்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள்தான். 1968-ல் உத்தரவிடப் பட்டது. அதை 7-9-1970-ல் நிறைவேற்றி வைத்து, இப்படி வீணாக விரயம் செய்யப்பட்ட ரூ. 16,729-50-ஐ ஈடு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது. கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் இடம் இருக்கிறது. நாள் கடந்து விட்டது என்பதை நினைவில் கொண்டு பணம் திரும்பி வந்தால் போதும் என்று விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.